[2008 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

15-4-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 15-4-2008 (செவ்வாய்க்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

40. (i) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற யாதொரு வணிகர், ஒசூரில் உள்ள திருவாளர்கள் டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்திற்கு அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக விற்பனை செய்யப்படும் பொருட்களின்மீது செலுத்தத்தக்க வரியினை அறிவிக்கையில் இணைக்கப்பட்ட படிவத்தில் உறுதிமொழி அளிக்கப்படுவதின் பேரில் விலக்களித்தது குறித்தும்; (ii) ஒசூரில் உள்ள திருவாளர்கள் டி.வி.எஸ். நிறுவனத்தால் தயாரிக்கப்படும் மூன்று சக்கர வண்டிகளின் விற்பனைமீது கூடுதல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்தும் மற்றும் (iii) ஒசூரில் உள்ள திருவாளர்கள் டி.வி.எஸ் நிறுவனத்தில் தயாரிக்கப்படும் இரண்டு மற்றும் மூன்று சக்கர வண்டிகளின் விற்பனைமீது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியினை ஒரு சதவிகிதமாகக் கணக்கிட வேண்டும் என்பது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 6-11-2007 ஆம் நாளிட்ட 181 ஆம் எண் அரசாணையில்

2008 ஏப்ரல் 11]

வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [*2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

53. மானியக் கோரிக்கை எண் 24-சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

54. மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009 (தமிழ், ஆங்கிலம்)

55. மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

56. மனுக்கள் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2007-2008)

57. மனுக்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (2007-2008)

58. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கை (2007-2008)

59. மனுக்கள் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை (2007-2008)

60. மனுக்கள் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை (2007-2008)

61. மனுக்கள் குழுவின் நாற்பத்து நான்காவது அறிக்கை (2007-2008)

62. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஐந்தாவது அறிக்கை (2007-2008)

63. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை (2007-2008)

TRUTH ALONE TRIUMPHS